எழுப்பினேன். நீங்கள் கூட அப்போதும் எடுத்துச் சொன்னீர்கள், நீங்கள் தான் இந்தச் சபைக்கு தலைவர், முழு பொறுப்பும் உங்களுடையதே. இந்த இடத்தில் உங்கள் வார்த்தைதான் வேத வாக்காக மதிக்கப் பெற வேண்டும். என்றாலும் நீங்கள் சொல்லியே அவர்கள் எதுவும் கேட்கவில்லை என்றால், அவர்கள் அதை மதிக்கவில்லை என்றால் என்ன செய்வது? . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது உணர்வுகளையும் நான் புரிந்திருக்கிறேன். ஏற்கனவே அவைகள் முறையாக முன் கூட்டியே வழங்கப் பெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரும்பவும் முன்போல தொடர்ந்து நடைபெறுவதாக உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளை இரண்டொரு நாள் முன்னதாக உறுப்பினர்களுக்குச் சேரும்படி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

6, அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக்குழு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீடுட்க் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 210வது விதியின் கீழ் 1980-81ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பொதுக்கணக்குக் குழு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக்கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

1980 ஜூலை 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 222வது விதியின் கீழ், 1980-81 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்,"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழு—தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 235—வது விதியின் கீழ், 1980—81 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

(ஈ) உரிமைக் குழு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழயன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 245—வது விதியின் கீழ். 1980—81 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப் பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்பு மிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தேடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பொற்று, நிறை வேற்றப்பெற்றது.